# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர்: G. ராஜா 9842364068 இணைஆசிரியர்: R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:108 ★19.08.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:108 ★19.08.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai



தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும்
தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில்
சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


## அறநிலையத்துறையில் 80 பேருக்கு பணி ஆணை

### முதல்வர் விஜய் வழங்கினார்

அறநிலையத் துறைக்கு டிஎன்பிஎஸ்சி மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 80 பேருக்கு முதல்வர் விஜய் நேற்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

மேலும், இருக்கண்குடி மாரியம்மன் கோயிலில் ரூ.23.67 கோடியில் கட்டப்பட்ட கட்டிடங்களை காணொலி மூலம் திறந்து வைத்தார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு: விருதுநகர் மாவட்டம், இருக்கண்குடி, மாரியம்மன் கோயிலில் பக்தர்கள் கோரிக்கையை ஏற்று ரூ.23.67 கோடி செலவில் கட்டப்பட்ட முடிகாணிக்கை மண்டபம், 125 பேர் அமர்ந்து உணவருந்தும் வகையிலான அன்னதானக் கூடம், 24 விருந்து மண்டபங்கள் மற்றும் 235 பூஜைப் பொருட்கள் விற்பனை நிலையங்களை முதல்வர்விஜய்காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

இந்து சமய அறநிலையத் துறைக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) மூலம் தேர்வு செய்யப்பட்ட 36 உதவிப் பொறியாளர்கள் (கட்டுமானம்), 38 உதவி ஸ்தபதிகள், 6 செயல் அலுவலர்கள் (நிலை1 மற்றும் நிலை3) என மொத்தம் 80 பேருக்கு முதல்வர் விஜய் பணிநியமன ஆணைகளை வழங்கினார்.



அறநிலையத் துறைக்கு முதல் முறையாக டிஎன்பிஎஸ்சி மூலம் உதவிப் பொறியாளர், உதவி ஸ்தபதி பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர் ரமேஷ், தலைமைச்செயலர் மு.சாய்குமார், துறை செயலர் ஜெ.குமரகுருபரன், அறநிலையத் துறை ஆணையர் டி.ஜி.வினய், கூடுதல் ஆணையர்கள் துரை ரவிச்சந்திரன், பொ.ஜெயராமன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அரசு பெண் ஊழியர்களுக்கு 3வது குழந்தைக்கும் 365 நாள் மகப்பேறு விடுப்பு

''அரசு பெண் ஊழியர்களின் 3 வது குழந்தைக்கும் இனி ஓராண்டு மகப்பேறு விடுப்பு அளிக்கப்படும்'' என்று சட்டப்பேரவையில் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் சரத்குமார் அறிவித்தார்.



சட்டப்பேரவையில் நேற்று மனிதவள மேலாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது பதிலளித்த துறை அமைச்சர் சரத்குமார் வெளியிட்ட முக்கிய அறிவிப்புகள்:

தமிழக அரசு சமூக நலன் மற்றும் மகளிர் மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளிக்கும் அரசாக இருப்பதால், அரசு பெண் பணியாளர்களின் 3வது குழந்தைக்குத் தற்போது வழங்கப்பட்டு வரும் மகப்பேறு விடுப்பு 12 வாரங்களில் இருந்து 365 நாட்களாக (ஓராண்டு) உயர்த்தி வழங்கப்படும். அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் தேர்வர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில் 'வெற்றிப் பாதை' என்ற செயலி ரூ.2 லட்சம் செலவில் உருவாக்கப்படும்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் கீழ் ரூ.50 லட்சம் செலவில் சமூக ஊடகக் கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்படும்.

பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் ரூ.1 கோடி செலவில் கணினி ஆய்வகம், ரூ.2.25 கோடி மதிப்பில் திறந்தவெளி விளையாட்டு அரங்கம் அமைக்கப்படும். அரசு சேவைகளைப் பொதுமக்களுக்கு எளிமையாகவும், விரைவாகவும் வழங்கும் வகையில் எளிமை ஆளுமை என்ற முன்முயற்சியின் கீழ் அனைத்து அரசு சேவைகள், உரிமங்கள், சான்றிதழ்கள் தடையின்மை சான்றிதழ்கள் (என்ஓசி), ஒப்புதல்கள் அனைத்தும் மறுசீரமைக்கப்பட்டு எளிமைப்படுத்தப்படும். இவ்வாறு பல்வேறு அறிவிப்புகளை அமைச்சர் சரத்குமார் வெளியிட்டார்.

இதைத் தொடர்ந்து பேசிய பாமக உறுப்பினர்சவுமியாஅன்புமணி, ''டிஎன்பிஎஸ்சி உறுப்பினர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

மேலும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தொகுப்பூதியப் பணியாளர்களாக உள்ளனர். குறிப்பாக குரூப்4 பணி நிலையில் உதவியாளர் பணியிடங்கள்காலியாக உள்ளன.

அவற்றையும் விரைவாக நிரப்ப வேண்டும்'' என்று வலியுறுத்தினார்.

அதற்கு அமைச்சர் சரத்குமார் பதில் அளிக்கையில், ''டிஎன்பிஎஸ்சி உறுப்பினர்களை நியமிப்பது தமிழக ஆளுநர் தான். காலி இடங்களை நிரப்புவது குறித்து முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

காலி இடங்களை நிரப்ப விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார்.

## திமுக பாதையில் தவெக: அண்ணாமலை குற்றச்சாட்டு

திமுக பாதையில் தவெக அரசு பயணிக்கிறதோ என்ற அச்சம் எழுந்துள்ளதாக 'வீ த லீடர்ஸ்' அமைப்பின் தலைவர் அண்ணாமலை குற்றம் சாட்டியுள்ளார்.



இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளப் பதிவில் கூறியிருப்பதாவது : தமிழக முதல்வர் விஜய் கவனத்துக்கு... திமுக ஆட்சி வீழ்ச்சியடைந்ததற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று, ஆளுங் கட்சியினர் என்ற அதிகார போதையில், மக்களின் விமர்சனங்களை அலட்சியப் படுத்தியதோடு, எதிர் கருத்துகளை முடக்கியதுதான். அதே பாதையில் உங்கள் அரசும் பயணிக்கிறதோ என்ற அச்சம் தற்போது எழுந்துள்ளது.

கடந்த ஒரு மாதத்தில் மட்டும், சமூக வலைதளங்களில் உங்கள்கட்சியினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மற்றும் விமர்சனங்களுக்காக மாற்றுக் கருத்து கொண்ட 25க்கும் மேற்பட்டோர் மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளதாக தகவல்கள் வருகின்றன.

சமூக வலைதளங்களில் தனிநபர் அவதூறு மற்றும் வரம்பு மீறிய பேச்சுகளை கண்காணிப்பது அவசியம்தான். ஆனால், ஆட்சியையும் ஆளும் கட்சியையும் விமர்சிக்கும் ஒவ்வொரு குரலையும் வழக்கு, கைது என்ற அதிகாரத்தின் மூலம் அடக்க முயற்சிப்பது ஜனநாயகத்துக்கு ஆரோக்கியமானதல்ல.

எதிர் கருத்துகளும் விமர்சனங்களும் ஜனநாயகத்தின் இயல்பான அங்கங்கள். சிறிய விமர்சனங்களுக்குக்கூட வழக்கு, கைது என்ற போக்கு தொடர்வது துரதிருஷ்டவசமானது. எனவே, இந்தப் போக்கை உடனடியாகத் தடுத்து, ஜனநாயகக் குரல்களுக்கும் விமர்சனங்களுக்கும் உரிய இடம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## 2000 கி.மீ. ஊரக சாலைகள் ரூ.2,550 கோடியில் மேம்பாடு

### அமைச்சர் ஆதவ் அர்ஜூனா அறிவிப்பு

தமிழகத்தில் 2000 கிமீ. ஊரகச் சாலைகள் ரூ.2,550 கோடியில் மேம்படுத்தப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வெளியிட்டார்.

சட்டப்பேரவையில் நேற்று, பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்துக்குப் பதிலளித்து அமைச்சர் ஆதவ் அர்ஜூனா வெளியிட்ட அறிவிப்புகள் வருமாறு: சென்னை கோவை தூத்துக்குடியை இணைக்கும் தொழில் தட விரைவுச்சாலை உருவாக்கப்படும்.

சென்னை கன்னியாகுமரி 8 வழிச்சாலை, சென்னை நுழைவு வழித்தடச் சந்திப்புகள் மேம்படுத்தல், திருச்சி கரூர் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கம், கிளாம்பாக்கம் செங்கல்பட்டு உயர்மட்டச்சாலை உள்ளிட்ட தேசிய நெடுஞ்சாலைத் திட்டங்களை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கடல்வழி உயர்மட்ட சாலை

சென்னை மாமல்லபுரம் புதுச்சேரியை இணைக்கும் கடல்வழி உயர்மட்டச் சாலைத் தொடர், மும்பை நவி மும்பை கடல் இணைப்புச் சாலை போன்று கட்டம், கட்டமாக உருவாக்கப்படும்.

முதல்வரின் பாதுகாப்பான சாலைகள் இயக்கத் திட்டத்தின் கீழ் ரூ.500 கோடியில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்து டன் கூடிய கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி போக்குவரத்து விதிமீறல் கண்டறிதல், சாலை பாதுகாப்புப் பணிகள், நெடுஞ்சாலை அவசர சிகிச்சை மையங்கள், சாலை பாதுகாப்பு கண்காணிப்புக்குழு ஆகியவற்றை உள்ளடக்கி செயல்படுத்தப்படும்.

சாலைகளை சீரான முறையில் பராமரிக்க சீரான சாலைகள் திட்டம் ரூ.250 கோடியில் செயல்படுத்தப்படும்.

சென்னை மாமல்லபுரம் புதுச்சேரி இடையில் கடல்வழிப் பயணிகள் படகு போக்குவரத்துச் சேவை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னையின் கலங்கரை விளக்கம் முதல் அடையாறு திரு.வி.க பாலம் வரை உயர்மட்டச் சாலை அமைக்கப்படும். வடசென்னையில் வியாசர்பாடியில் உள்ள ரயில்வே மேம்பாலம் நீட்டிக்கப்படும்.

பேசின்பிரிட்ஜ் பகுதியில் உள்ள குறுகலான பாலங்கள் அகலப்படுத்தப்படும். சென்னை திருத்தணி சாலையில் பாடி முதல் திருநின்றவூர் வரை உயர்மட்டச்சாலை அமைக்கப்படும்.



ஊரகச் சாலைகளை தரம் உயர்த்த ஆண்டு தோறும் 2,000 கி.மீ சாலைகளைமேம்படுத்த ரூ.2,550 கோடியில் ஊரகப்பகுதி சாலைகள்மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும்.

சென்னை, ஆவடி, தாம்பரம், திருச்சி, கோவை, மதுரை, தூத்துக்குடி மாநகராட்சிகளில் ரூ.1000 கோடியில் 500 கி.மீ சாலைகள் மேம்படுத்தப்படும். சென்னை சென்ட்ரல் கத்திப்பாரா கோயம்பேடு பகுதிகளை இணைக்கும் முக்கோண வழித்தடச் சாலைகள், பல்லாவரம் துரைப்பாக்கம் சாலைகள் ரூ.400 கோடியில் மேம்படுத்தப் படும்.

சென்னை தொடக்க கிலோமீட்டர்புள்ளியில், தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் தொடக்கப் புள்ளியை குறிக்க நினைவுத் தூண் அமைக்கப்படும். அடுத்த 10 ஆண்டுகளுக்குத் தேவையான சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்களை உருவாக்க தமிழ்நாடு நெடுஞ்சாலை பெருந்திட்டம் தயாரிக்கப்படும்.

ராமேசுவரம் அக்னித் தீர்த்தத்தில் இருந்து பாம்பன் கால்வாய் வழியாக மண்டபம் வரை உள்நாட்டுப் பயணிகள் படகுப் போக்குவரத்து சேவை தொடங்கப்படும்.

இந்தியா இலங்கை இடையிலான உறவுகளை மேம்படுத்த நாகப்பட்டினம், காங்கேசன் துறை இடையில் படகு போக்குவரத்துத் துறை சேவைகள் விரிவுபடுத்தப்படும்.

பணி வாய்ப்புக்காக காத்திருக்கும் பொறியியல் பட்டதாரிகளுக்கு பொதுப்பணித்துறை ஒப்பந்தங்களில் சலுகையுடன் வாய்ப்பு வழங்கப்படும்.

ரூ.1 கோடி தொகுப்பு நிதியுடன் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமான நிறுவனம், மாநிலத்தில் நடைபெறும் ரூ.200 கோடிக்கு மேற்பட்ட அரசு கட்டிடப் பணிகளை மேற்கொள்ள நிறுவப்படும் என்பது உட்பட 33 அறிவிப்புகளை வெளியிட்டார்.

## தேசிய மருத்துவ ஆணையம் மூலம் மருத்துவர்களுக்கு தனி அடையாள எண்

தேசிய மருத்துவ ஆணையம் மூலம் மருத்துவர்களுக்கு தனி அடையாள எண் வழங்குவதற்கான புதிய வரைவு விதிகள் வெளியிடப்பட்டுள்ளது.

மருத்துவர்கள் பதிவு மற்றும் மருத்துவ உரிமம் திருத்த விதிமுறைகள் 2026 வரைவு விதிகளில் தேசிய மருத்துவ ஆணையம் மாற்றங்கள் செய்து அரசிதழில் வெளியிட்டுள்ளது. அதன்படி, மாநில மருத்துவ கவுன்சிலில் மருத்துவர் பதிவு செய்தவுடன், தேசிய மருத்துவ ஆணையத்தின் நெறிசார் வாரியம் மூலமாக அவருக்கு தனித்துவமான அடையாள எண் உருவாக்கப்படும்.

இந்த எண் வழங்கப்பட்ட பிறகு, அந்த மருத்துவர் நாட்டின் எந்த மாநிலத்திலோ அல்லது யூனியன் பிரதேசத்திலோ தனியாக மீண்டும் பதிவு செய்ய தேவையில்லாமல் இந்தியா முழுவதும் மருத்துவ பயிற்சி மேற்கொள்ள தகுதி பெறுவார்.



மாநிலம் அல்லது யூனியன் பிரதேசத்தின் குறியீடு, மாநில மருத்துவ கவுன்சில் பதிவு எண் ஆகியவை உள்ளடங்கியிருக்கும் வகையிலான தனித்துவ அடையாள எண்ணாக இது இருக்கும்.

தனித்துவ அடையாள எண் முறை மூலம் ஒரு மருத்துவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை மாநில பதிவேட்டிலும், தேசிய பதிவேட்டிலும் உடனே அறிந்துகொள்ள முடியும்.

ஏற்கெனவே மாநில மருத்துவ கவுன்சில்களில் பதிவு செய்துள்ள மருத்துவர்கள், தேசிய மருத்துவ ஆணையத்தின் இணையதளத்தில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தங்களது விவரங்களை புதுப்பித்து தனித்துவ அடையாள எண்ணை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்காக எந்தவொரு கட்டணமும் வசூலிக்கப்படாது. இதுதொடர்பாக பொது மக்கள் மற்றும் மருத்துவத்துறை சார்ந்தவர்கள் தங்களின் கருத்துகளையும், ஆட்சேபனைகளையும் 30 நாட்களுக்குள் சமர்ப்பிக்கலாம் என்று ஆணையம் தெரிவித்துள்ளது.

# ஜே.சி.பி வாடகை உயர்வு மற்றும் வேலைநிறுத்தம்

## உத்தமபாளையம் தாலுகா எர்த் மூவர்ஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை

தேனி மாவட்டம் உத்தமபாளையம் தாலுகா எர்த் மூவர்ஸ் உரிமையாளர்கள் நலச்சங்கம் சார்பாக, ஆகஸ்ட் 18, 19 மற்றும் 20 ஆகிய மூன்று நாட்களுக்கு சின்னமனூர் பகுதியில் அடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. டீசல் விலை, வாகன இன்சூரன்ஸ், சாலை வரி மற்றும் உதிரிபாகங்களின் கடும் விலை உயர்வு காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முன்பு 21 லட்சம் ரூபாயாக இருந்த ஒரு புதிய ஜேசிபி வாகனத்தின் விலை,




தற்போதைய சந்தை நிலவரப்படி பயன்பாட்டிற்கு வரும்போது சுமார் 45 லட்சம் ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

மேலும், வாகன பராமரிப்பில் முக்கிய பங்கு வகிக்கும் ஆயில் சர்வீஸ் கட்டணம் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கே உரிமையாளர்களின் வருமானத்தில் 70 சதவீதம் வரை செலவாகிவிடுகிறது. மீதமுள்ள 30 சதவீத வருமானத்தை வைத்துக் கொண்டு வங்கிக் கடன் தவணைகளை (EMI) செலுத்த முடியாமல் பல உரிமையாளர்கள் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர். இத்தகைய நிதி நெருக்கடிகளுக்கு மத்தியிலும் கடன் நிலுவைகளுடன் தொடர்ந்து மக்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய நடைமுறை சிக்கல்களை கருத்தில் கொண்டு, வரும் 20.08.2026 முதல் உத்தமபாளையம் தாலுகா முழுவதிலும் ஜேசிபி வாகனங்களுக்கான புதிய வாடகை விகிதம் அமல்படுத்தப்படுகிறது. அதன்படி 1 மணி நேரத்திற்கு ரூ. 1,500, டிரைவர் படி ரூ. 800 மற்றும் குறைந்தபட்ச கட்டணமாக 2 மணி நேரத்திற்கு ரூ. 4,500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வாடகை உயர்வில் சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஒருமித்த முடிவை எடுத்துள்ளனர். எந்தவொரு உரிமையாளரும் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ வாங்காமல், அனைவருமே ஒரே சீரான கட்டணத்தில் வாகனங்களை இயக்க வேண்டும் என்பது சங்கத்தின் முக்கிய தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த கட்டண உயர்வு பொதுமக்களை பெரிதும் பாதிக்காத வகையில் நியாயமான முறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதால், இக்கட்டான சூழலில் இருக்கும் உரிமையாளர்களின் நிலைமையை உணர்ந்து பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் முழு ஆதரவும் ஒத்துழைப்பும் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### தேசபக்தி நாளிதழ் செய்தி எதிரொலி:

# செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சிக்குட்பட்ட அங்கன்வாடி மையம் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது

**செங்குன்றம், ஆகஸ்ட் 19:**

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சி வார்டு எண் 2க்குட்பட்ட சோத்துப்பாக்கம் சாலை பழைய தீயணைப்பு நிலையம் அருகே பல ஆண்டுகளாக இயங்கி வந்த அங்கன்வாடி மையம் சேதமடைந்து பயன்படுத்த முடியாத நிலை இருந்த சூழ்நிலையில் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஏற்று கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் 6வது நிதிக்குழு பள்ளி மேம்பாட்டு மான்யம் 2025 2026 திட்டத்தின் கீழ் ரூபாய் 16,50,000 மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பல மாதங்களாக மழலைச் செல்வங்களின் பயன்பாட்டுக்கு வராமல் இருந்தது.




ஒரு சில வாரங்களுக்கு முன்பு இந்த அங்கன்வாடி மையத்தை மழலையர்களின் பயன்பாட்டுக் கொண்டு வர வேண்டுமென்று தேசபக்தி நாளிதழில் செய்தியாக வெளியிட்டிருந்தோம். இந்த அங்கன்வாடி மையத்தை வில்லிவாக்கம் வட்டார ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் காஞ்சனா திறந்து வைத்ததால் மழலையர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அரசு அலுவலர்கள், தேசபக்தி நாளிதழ் உள்ளிட்ட அனைவருக்கும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்.

# எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த் தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு பேரணி




**திருவள்ளூர், ஆகஸ்ட் 19:**

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஒருங்கிணைந்த எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலகு சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா எச்.ஐ.வி/எய்ட்ஸ் மற்றும் பால்வினை நோய்த் தொற்று குறித்த தீவிர விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 150க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவமாணவியர்கள் கலந்து கொண்ட பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி. ராஜ்குமார், மாவட்ட சுகாதார அலுவலர் (திருவள்ளூர்) மரு.பிரியாராஜ், துணை இயக்குநர் (காசநோய்) மரு.சங்கீதா, மண்டல தடுப்பு அலுவலர் பபிதா, தனியார் தொண்டு நிறுவன தலைவர் சகோதரி அன்னை கொலாஷ்டிகா, கல்லூரி பேராசிரியர்கள், திரளான மாணவமாணவியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# கம்பம் தொகுதியில் மக்களின் குரலாக ஒலிக்கும் PLA. ஜெகநாத் மிஸ்ரா MLA" நூற்றாண்டு பேசும் 100 நாள் மக்கள் பணியின் புதிய அத்தியாயம்

தமிழக வெற்றிக் கழக தலைவரின் வழிகாட்டுதலிலும், தமிழக மக்களின் முதல்வர் தளபதி ஜோசப் விஜய் அவர்களின் நல்லாட்சியிலும், கம்பம் சட்டமன்ற தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், உண்மைமிக்க மக்கள் சேவகருமான PLA. ஜெகநாத் மிஸ்ரா அவர்கள் பதவியேற்று 100 நாட்களை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். இந்த 100 நாள் பொன்னான பயணம், கம்பம் தொகுதியின் மக்கள் பணியில் ஒரு புதிய வரலாற்று அத்தியாயமாக அமைவதோடு, எதிர்கால பெருஞ்சாதனைகளுக்கான வலுவான அடித்தளமாகவும் திகழ்கிறது. பதவியை வெறும் அதிகாரமாக மட்டுமே பார்க்காமல், எளிய மக்களின் தேவைகளை தீர்க்கும் மாபெரும் பொறுப்பாக ஏற்றுக்கொண்டு செயலாற்றி வரும் இவர், தினமும் தொகுதி மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து உடனடி நடவடிக்கை எடுத்து வருகிறார். குறிப்பாக, கல்வி வளர்ச்சி, சுகாதார மேம்பாடு, மலைவாழ் பழங்குடியின மக்களின் நல்வாழ்வு, அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பல்வேறு தொலைநோக்கு திட்டங்களுக்காக சட்டமன்றத்தில் தொடர்ந்து தனது வலுவானகுரலைஎழுப்பி வருகிறார். "100 நாட்கள், 100 தீரமிக்க முயற்சிகள், ஆயிரம் நம்பிக்கைகள், லட்சக்கணக்கான மக்களின் எதிர்பார்ப்புகள்" என்ற பிரம்மாண்ட இலக்கோடு, மக்களின் தேவைகளை உணர்ந்து களத்தில் இறங்கி செயல்படும் இவரின் அசாத்திய உழைப்பு, தொகுதி மக்களிடையே பெரும் நம்பிக்கையை விதைத்துள்ளது. கம்பம் தொகுதியை மாநிலத்திலேயே முதன்மையான முன்மாதிரி தொகுதியாக மாற்றும் நோக்கில், 'மக்களுக்காக, மக்களோடு, மக்களின் நம்பிக்கையாக தொடர்ந்து பயணிக்கும் மக்கள் சேவகர் PLA. ஜெகநாத் மிஸ்ரா MLA அவர்களின் நூற்றாண்டு பேசும் இந்த 100 நாள் சாதனை பயணம் மென் மேலும் தொடரட்டும்!

### பழனி அருகே

# பள்ளி மாணவன் தூக்கிட்டு தற்கொலை

திண்டுக்கல், பழனியை அடுத்த கீரனூர் அருகே மானூரை சேர்ந்த முனீஸ்வரன் மகன் விஷ்வா(15) இவர் 10ம் வகுப்பு படித்து வந்தார் இந்நிலையில் இவர் வீட்டின் உள்ரூமில் சேலையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

தகவல் அறிந்த கீரனூர் இன்ஸ்பெக்டர் வெங்கடாசலம் தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று மாணவன் விஸ்வாவின் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்காக பழனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து வழக்கு பதிவு செய்து இறப்பு காரணகாரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



திண்டுக்கல் மாவட்டம் பழனி திரு ஆவினன்குடி திருக்கோயில் அருகில் சாலையோர கடைகளால் பக்தர்கள் மிகவும் அவதிக்குள்ளாகி ஆகின்றன கடைகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் தேவஸ்தான நிர்வாகம் ஒன்று சேர்ந்து அப்புறப்படுத்தி வரும் பக்தர்களுக்கு மன நிம்மதியை தரும்படி சமூக ஆர்வலர்கள் மற்றும் முழு பக்தர்கள் வேண்டுகோள் வைத்துள்ளனர்

# புதுமைப்பெண், தமிழ்புதல்வன் திட்டங்களில் நிலுவை பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்

## திருவண்ணாமலை ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தல்

**திருவண்ணாமலை, ஆக. 19**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில், சமூக நலத் துறை சார்பில் புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று (ஆக.18) நடைபெற்றது.




புதுமைப்பெண் மற்றும் தமிழ்புதல்வன் திட்டங்களின் கீழ், 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்று, பின்னர் உயர்கல்வி பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்று இளங்கலை பட்டப்படிப்பு, பட்டயப் படிப்பு மற்றும் தொழிற் கல்வி (ITI) பயிலும் மாணவர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருகின்றனர். இந்நிலையில், 2026–2027ம் கல்வியாண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் இத்திட்டங்களில் பயன்பெற தகுதியுள்ள மாணவ, மாணவியர்களின் விண்ணப்பங்களில் SCHOOL APPEAL PENDING, AADHAAR SEEDING PENDING, YET TO BE APPLIED, YET TO BE VERIFIED உள்ளிட்ட நிலுவை நிலைகளில் உள்ள பணிகளை விரைந்து முடிப்பது தொடர்பாக கல்லூரி முதல்வர்கள் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்களுடன் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மாணவர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் உரிய காலத்தில் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், நிலுவையில் உள்ள பணிகளை விரைந்து முடித்து, தகுதியான அனைத்து மாணவ, மாணவியர்களும் திட்டத்தின் பயனைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் 125 கல்லூரிகளைச் சேர்ந்த முதல்வர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர். மேலும், முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், முன்னணி வங்கி மேலாளர், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர், TACTV வட்டாட்சியர், EDISTRICT மேலாளர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மதுர சிவந்தி ஆதித்தன் நகர் ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலய தீமிதி திருவிழா

**செங்குன்றம், ஆகஸ்ட் 19:**


மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி ஆட்டந்தாங்கல் கிராமம் மதுர சிவந்தி ஆதித்தன் நகரில் பக்தர்களுக்கு அருள்பாலித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ நாகவள்ளிமுத்துமாரியம்மன் ஆலயத்தில் 36ம் ஆண்டு ஆடிமாத திருவிழா மற்றும் 7ம் தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் செயல் தலைவர்கள் கந்தன், சரவணன், மோகன் குமார், செயலாளர் லோகநாதன் , பொருளாளர் பிரபு துணைத்தலைவர்கள் தீனா, காலேந்திரன், விக்னேஷ், சுரேஷ், துணைச்செயலாளர்கள், சேகர், வினாயகமூர்த்தி, சௌந்தரராஜன், மணிகண்டன், கலையரசன், கௌரவ ஆலோசகர்கள் பாலசுப்பிரமணியம், கஜபதி, ஆலய முன்னாள் காப்பாளர்கள் சிவபெருமாள், சண்முகம், சுப்பையா உட்பட ஆலய நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், ஆலமரம் அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயத்திலிருந்து மேளதாளத்துடன் சுமார் 300க்கும் மேற்பட்ட தாய்மார்கள் தங்களது சிறசியில் பால்குடம் சுமந்தவாறு ஸ்ரீ நாகவள்ளி முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு சென்றடைந்தனர். பின்னர் அம்மனுக்கு பால் அபிஷேகம் செய்து தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து அம்மனுக்கு வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு தூபதீப ஆராதனை காண்பிக்கப்பட்டது.



பின்னர் பரதநாட்டியம், கங்கை திரட்டுதல், காப்புகட்டுதல், கரகம் எடுத்தல், அம்மன் திரு வீதி உலா, அக்னி கப்பறை எடுத்தல், முளைப்பாரி எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்றவை நடைபெற்றது. தொடர்ந்து சுமார் 200க்கும் மேற்பட்ட காப்பு கட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில்இறங்கிதங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர்.

இதில் ஆலய அனைத்துநிலை பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.

மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள்சார்பில்பக்தர்களுக்கு அன்னதானம் , குளிர்பானங்கள் வழங்கினர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி அடித்து பாலாறு பொருட்களாக அணையின் செத்து மிதக்கும் மீன்கள் அணையின் நீரே குடிநீராக பயன்படுத்தும் சுற்று வட்டார பொதுமக்கள் செத்த மீன்களே அகற்றி குடிநீர் தரம் உறுதி செய்து வேண்டுமென பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்

# தொடர் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்ட மூன்று குற்றவாளிகள் கைது

ஆவடி, ஆகஸ்ட் 19: வேண்பாக்கம் பள்ளத்தைச் சேர்ந்த அப்புன்ராஜ் மற்றும் பரத் ஆகிய இருவரையும் அப்புன்ராஜ், ராஜவேல், முருகன் மற்றும் வாண்டுபரத் ஆகியோர்கள் சிங்கிலிமேடு பகுதியில் கத்தியால் தாக்கியதாராஜ் மற்றும் வாண்டுபரத் ஆகியோர் உடைத்ததாகவும், அதனைத் தட்டிக் கேட்கச் சென்ற தன்னையும் கத்தியைக் காட்டி மிரட்டிச் சென்றதாகவும் தெரிவித்து அளிக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில், பொன்னேரி மகேஸ்வரி அவர்களின் அறிவுறுத்தலின்பேரிலும், பொன்னேரி சரக காவல் உதவி ஆணையாளர் (பொறுப்பு) ராஜாராபர்ட் வழிகாட்டுதலின்படியும், திருப்பாலைவனம் காவல்நிலைய ஆய்வாளர் அகிலன்ராஜ் தலைமையி




கவும், இதனைத் தொடர்ந்து தடப்பெரும்பாக்கம் ஒயின்ஷாப்பில் நாகராஜ் என்பவரை முருகன், அப்புன்ராஜ் மற்றும் வாண்டு பரத் ஆகியோர் கத்தியால் தாக்கியதாகவும், மேலும் தொடர்ந்து திருவேங்கடாபுரத்தைச் சேர்ந்த சதீஷ் என்பவரின் TATA ACE வாகனத்தின் முன்பக்க கண்ணாடி மற்றும் அவரது வீட்டின் கதவை முருகன், அப்புன் காவல் நிலையத்தில் தனித்தனியாக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் ஆவடி காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின்படியும், காவல் இணை ஆணையாளர் மருத்துவர் ஆர்.சிவகுமார் மேற்பார்வையிலும், செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையாளர் கே. லான போலீசார் மேற்படி தொடர் குற்றச்சம்பவங்களில் ஈடுபட்ட அப்புன்ராஜ் (வ/32), ராஜவேல் (வ/25), முருகன் (வ/25) ஆகிய 3 பேரை கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டனர். மேலும், தலைமறைவாக உள்ள எதிரியை கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஆயத்த ஆடையக உற்பத்தி அலகு அமைக்க ரூ.3 லட்சம் மானியம்

## தகுதியான 10 பேர் குழுவாக விண்ணப்பிக்கலாம்

திருவண்ணாமலை, ஆக.19

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் வகையில், ஆயத்த ஆடையக உற்பத்தி அலகு அமைக்க தமிழக அரசு சார்பில் ரூ.3 லட்சம் மானியம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆயத்த ஆடையக உற்பத்தி அலகு தொடங்குவதற்குத் தேவையான இயந்திரங்கள், மூலப்பொருட்கள் மற்றும் இதர ஆரம்பகட்ட செலவினங்களுக்காக வழங்கப்படும் நிதியுதவியில் ரூ.3 லட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் 10 பேர் கொண்ட குழுவாக இணைந்துவிண்ணப்பிக்க வேண்டும். குழுவில் இடம்பெறும் அனைவரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் அல்லது சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு குழு உறுப்பினரின் ஆண்டு வருமானமும் ரூ.1 லட்சத்திற்கு மிகாமல்



இருக்க வேண்டும்.

தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்

குழு உறுப்பினர்களின் குறைந்தபட்ச வயது 20 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் மூலம் தொழில் பயிற்சி பெற்ற நபர்களைக் கொண்ட குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும், குழுவில் 10 பேர் மட்டுமே இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதுடன், அனைவரும் திட்டத்தின்நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகத்தை அணுகி உரிய விவரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



பழனி அருகே ஆயக்குடி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம் அருகே உள்ள குப்பை கிடங்கில் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் மற்றும் வார்டு கவுன்சிலர் சரஸ்வதி வாஞ்சிநாதன் தலைமையில் பலமுறை புகார் தெரிவித்தும், போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் இன்று அந்த குப்பை கிடங்கு மற்றும் சுகாதார வளாகங்கள் போன்றவற்றை ஆய்வு மேற்கொண்டார். மேலும் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.



# திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலுக்குள் செப்டம்பர் 1 முதல் செல்போன்களுக்கு தடை

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயிலுக்குள் செப்டம்பர் 1, 2026 முதல் பக்தர்கள் செல்போன்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்படவுள்ளது. இதையடுத்து, பக்தர்களின் வசதிக்காக கோயிலின் முக்கிய நுழைவு வாயில்கள் அருகே செல்போன் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பஞ்சபூத ஸ்தலங்களில் அக்னி ஸ்தலமாகவும், உலகப் புகழ்பெற்ற ஆன்மிகத் தலமாகவும் விளங்கும் அருணாசலேசுவரர் திருக்கோயிலுக்கு தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் வருகை தந்து சுவாமி அம்மனைதரிசனம்செய்து வருகின்றனர்.

தமிழக இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் சுற்றறிக்கை உத்தரவின்படி, கோயிலின் ஆன்மிகச் சூழல் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு,

செப்டம்பர் 1 முதல் கோயிலுக்குள் செல்போன்கள் மற்றும் அலைபேசிகளை எடுத்துச் செல்ல தடை அமல்படுத்தப்படவுள்ளது.

இதையடுத்து, பக்தர்கள் தங்களது செல்போன்களை பாதுகாப்பாக ஒப்படைப்பதற்காக கிழக்கு ராஜகோபுரம் அருகே இரண்டு இடங்களிலும், வடக்கு அம்மணி அம்மன் கோபுரம் அருகே இரண்டு இடங்களிலும், தெற்கு திருமஞ்சன கோபுரம் அருகே ஒரு இடத்திலும் என மொத்தம் ஐந்து பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த மையங்களில் பக்தர்கள் தங்களது செல்போன்களை ரூ.5 கட்டணம் செலுத்தி ஒப்படைத்து, அதற்கான டோக்கனை பெற்றுக் கொள்ளலாம். சுவாமிஅம்மன் தரிசனம் முடித்த பின்னர், டோக்கனை காண்பித்து தங்களது செல்போன்களை மீண்டும் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, கோயிலுக்கு தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் செல்போன்களை கொண்டு வருவதை தவிர்த்து, கோயில் நிர்வாகம் மேற்கொள்ளும் இந்த நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என கோயில் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும், தடையை மீறி மறைமுகமாக செல்போன்களை கோயிலுக்குள் எடுத்துச் செல்லும் பக்தர்களிடமிருந்து அவை உடனடியாக பறிமுதல் செய்யப்பட்டு, காவல் துறை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கோயில் நிர்வாகம் எச்சரித்துள்ளது.

# திருவண்ணாமலை மாவட்ட நீதிமன்றங்களில் அரசு வழக்குரைஞர் பணியிடங்கள்: ஆக.29க்குள் விண்ணப்பிக்கலாம்

திருவண்ணாமலை, ஆக.19

திருவண்ணாமலை மாவட்டநீதிமன்றங்களில் காலியாக உள்ள அரசு குற்றவியல் வழக்குரைஞர் (Public Prosecutor), கூடுதல் அரசு குற்றவியல் வழக்குரைஞர் (Additional Public Prosecutor), அரசு சிறப்பு வழக்குரைஞர் (Special Public Prosecutor), அரசு வழக்குரைஞர் (Government Pleader), கூடுதல் அரசு வழக்குரைஞர் (Additional Government Pleader) ஆகிய பணியிடங்களை நிரப்புவதற்காக ஏற்கனவே மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், தமிழ் நாடு அரசின் உள்துறை (நீதிமன்றங்கள்VIA) துறை சார்பில் 07.08.2026 அன்று வழங்கப்பட்ட கூடுதல் விளக்கம் மற்றும் அறிவுறுத்தலின்படி, திருவண்ணாமலை விரைவு மகளிர்நீதிமன்றத்திற்கான அரசு சிறப்பு வழக்குரைஞர் பணியிடத்திற்கான தகுதி தொடர்பாக புதிய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, விரைவு மகளிர் நீதிமன்றம், திருவண்ணாமலையில் அரசு சிறப்பு வழக்குரைஞர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் வழக்கறிஞர் பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி விண்ணப்பித்த வழக்கறிஞர்களில், விண்ணப்பம் சமர்ப்பித்த நாளன்று குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் வழக்கறிஞர் பணி அனுபவம் பெற்றிருந்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை. அவர்களது ஏற்கனவே பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

அதேபோல், ஏற்கனவே விண்ணப்பித்திருந்தும் 10 ஆண்டுகளுக்கு குறைவான வழக்கறிஞர் பணி அனுபவம் கொண்டவர்கள், தங்களது தகுதிக்கேற்ப ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள பிற அரசு வழக்குரைஞர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலும், குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் வழக்கறிஞர் பணி அனுபவம் பெற்ற தகுதியுடையவர்கள், அரசு சிறப்பு வழக்குரைஞர் பணியிடத்திற்கு புதிதாக விண்ணப்பிக்க விரும்பினால், உரிய AnnexureI மற்றும் AnnexureII படிவங்களில் விண்ணப்பித்து, தேவையான சான்றிதழ்களின் நகல்களுடன் 6 பிரதிகள் மற்றும் 2 சமீபத்திய கடவுச்சீட்டு அளவு புகைப்படங்களுடன், வரும் 29.08.2026 மாலை 5.45 மணிக்குள் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கலாம். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குப்பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

# கலசப்பாக்கம் ஒன்றியத்தில் வளர்ச்சிப் பணிகள்

## திட்ட இயக்குனர் காஞ்சனா நேரில் ஆய்வு

கலசப்பாக்கம்,ஆக.19

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட பல்வேறு ஊராட்சிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட திட்ட இயக்குனர் காஞ்சனா



நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது கலைஞரின்கனவு இல்லம் திட்டம், பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம், புதிய நர்சரி கார்டன்கள், விபிஜிராம்ஜி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் குளம் அமைக்கும் பணிகள், புதிய சாலைப் பணிகள்மற்றும்ஊராட்சி மன்ற அலுவலக கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட பல்வேறு பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

ஒவ்வொரு திட்டத்தின் செயல்பாடுகள், பணிகளின் முன்னேற்றம் மற்றும் தரம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த மாவட்ட திட்ட இயக்குனர், நடைபெற்று வரும் அனைத்து பணிகளையும் உரிய தரத்துடன் மேற்கொண்டு, காலதாமதமின்றிவிரைந்துமுடிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

நர்சரி கார்டன்களை ஆய்வு செய்த அவர், அங்கு நடப்பட்டுள்ள மரக்கன்றுகளை முறையாக பராமரிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ஒவ்வொரு மரக்கன்றுக்கும் பாதுகாப்பு வேலி அமைத்து, தினமும் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும் என்றும், மரக்கன்றுகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, அங்கன்வாடி மையத்தில் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட திட்ட இயக்குனர், குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் மற்றும் சுவையை நேரில் பரிசோதித்தார். குழந்தைகளுக்கு சத்தான மற்றும் தரமான உணவு வழங்கப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

மேலும், ஊராட்சி மன்ற அலுவலக கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்து பொது மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்றும், அனைத்து வளர்ச்சித் திட்டப் பணிகளையும் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் நிறைவேற்ற வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு மாவட்ட திட்ட இயக்குனர் காஞ்சனா உத்தரவிட்டார்.

ஆய்வின்போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கோவிந்தராஜுலு, நிர்மலா உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



# புனித சண்முக நதி தூய்மை பணி

மழையினறி வறண்டு காணப்படும் பழநி புனித சண்முக நதியில், பச்சை ஆத்தாள் கோவில் அருகே தேங்கியிருந்த நீர்ப்பகுதியில் இன்று சுமார் 2 டன் குப்பைகள் மற்றும்பழையதுணிமணிகள் அகற்றப்பட்டு தூய்மை செய்யப்பட்டது. ஆடி அமாவாசை உள்ளிட்ட நாட்களில் பக்தர்கள் விட்டுச் சென்ற துணிகள் மற்றும் குப்பைகளால் நீர் மாசடைந்திருந்தது. நதியில் துணிகளை வீசுவதால் நீர் மாசுபடுவதுடன், நீரில் வாழும் உயிரினங்களும் பாதிக்கப்படுகின்றன.

இந்த தூய்மை கதிர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப் பணியில் இணைந்த ஆயக்குடி ரஞ்சித், மீனவர் மருது மற்றும் சகோதரர்களுக்கு நன்றி தெரிவித்தார்.


# தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், தேக்கம்பட்டி சிட்கோ வணிக வளாகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.வைத்திநாதன், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், தேக்கம்பட்டி சிட்கோ வணிக வளாகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (18.08,2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், சிட்கோ வணிக வளாகத்தில் செயல்பட்டுவரும் தொழில் நிறுவனங்களை பார்வையிட்டு நிறுவானத்தார்களை சந்தித்து செயல்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார். அப்பொழுது நிறுவனத்தார்கள் தங்கள் பகுதியில் அவ்வப்பொழுது மின்தடை ஏற்படுவதாகவும், போதிய அளவுதண்ணீர்வசதிவழங்கிடவேண்டி கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து, இத்தகைய குறைகளை சரிசெய்திட சிட்கோ கிளை மேலாளர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

தொழில் நிறுவன மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உரிமையாளர்களிடம் தெரிவிக்கையில், இங்கு 47 யூனிட்டுகள் அமையும் வகையில் தொழில்மனைகள் உள்ளது. தற்பொழுது 10க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மட்டுமே வரப்பெற்றுள்ளது. மேலும், தொழில் முதலீட்டாளர்களை வரவழைத்து தொழில் நிறுவனங்களை உருவாக்கிட முன்வர வேண்டும் என தெரிவித்ததுடன், சிட்கோ நிறுவனம் மூலம் தொழில்முனைவோர்களுக்கு தேவையான வழிகாட்டுதல் வழங்கி சிட்கோ வணிக வளாகத்தில் முழுமையாக தொழில் நிறுவனங்கள் அமைத்து செயல்படவும், இதன்மூலம் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்புகள் வழங்கிடும் வகையில் செயலாற்றிட வேண்டும் 61601 மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வில் மதுரை மண்டல சிட்கோ கிளை மேலாளர் திரு.பிரான்சிஸ் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.



# தவணை வேண்டாம்... முழு பயிர்க்கடனையும் தள்ளுபடி செய்யுங்கள்

## விவசாயிகள் நூதன போராட்டம்

செய்யாறு,ஆக19

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே அனக்காவூர் வட்டார வளர்ச்சி அலுவலகம் முன்பு, கட்சி சார் பற்றவிவசாயசங்கத்தினர் பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி நூதன முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

விவசாயிகளின் பயிர்க்கடனை தவணை முறையில் தள்ளுபடி செய்வதைகைவிட்டு, தேர்தல் அறிக்கையில் அறிவித்தபடி முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி இந்த போராட்டம் நடைபெற்றது. இதில், விவசாயிகள் பகுதி பகுதியாக சோறு போட்டு நூதன முறையில் தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். மேலும், முதலமைச்சரைப் போன்று உருவகப்படுத்தப்பட்ட நபருக்கு பட்டை நாமம் அணிவித்து, விவசாயிகள் கேள்வி எழுப்பும்போது சைகை மூலம் பதில் அளிப்பது போன்று காட்சிப்படுத்தி, அரசின் பயிர்க்கடன் தள்ளுபடி நடவடிக்கையை விமர்சித்தனர். ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் கூறியதாவது:

சமூக பாதுகாப்புத் திட்டங்களுக்கு அரசு ஆண்டு தோறும் ரூ.1.50 லட்சம் கோடி செலவிடுவதாகவும், 5 ஆண்டுகளில் ரூ.7.50 லட்சம் கோடி வரை செலவிடும் நிலையில், விவசாயிகளின் பயிர்க்கடனை 5 ஆண்டுகளுக்கு ரூ.20 ஆயிரம் கோடி அளவில் தள்ளுபடி செய்வதில் அரசு தயக்கம் காட்டக்கூடாது. வேளாண்மைத்துறைக்கு ரூ.14,950 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், விவசாயத்துடன் தொடர்புடைய துறைகளுக்கும் போதிய நிதி ஒதுக்க வேண்டும். இல்லையெனில் வேளாண் உற்பத்தி பாதிக்கப்பட்டு, உணவுப் பொருட்களின் விலை உயர்ந்து, பொதுமக்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்படும்.

எனவே, விவசாயிகளின் கோரிக்கையை அரசு கருத்தில் கொண்டு, தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியின்படி பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். தவணை முறையில் கடன் தள்ளுபடி செய்வதை கைவிட்டு, விவசாயிகளின் கடன் சுமையை முற்றிலும் நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் விவசாய சங்க நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

# குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க கடும் நடவடிக்கை

## திருவண்ணாமலை ஆட்சியர் வந்தனா கார்க் எச்சரிக்கை

திருவண்ணாமலை, ஆக. 19

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமையில், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சார்பில் மாவட்ட குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்புக் குழுக் கூட்டம் இன்று (ஆக.18) நடைபெற்றது.



கூட்டத்தில், மாவட்டத்தில் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் குழந்தைத் திருமணம், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள்,

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல், குழந்தைகள் பிச்சை எடுப்பதைத் தடுத்தல், இளவயது கர்ப்பம் மற்றும் சட்டவிரோத தத்தெடுப்பு உள்ளிட்ட பிரச்சினைகளைத் தடுப்பது குறித்து பல்வேறு துறை அலுவலர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தப்பட்டது.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் நடைபெறாமல் தடுக்க அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து தீவிரமாக கண்காணித்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகளை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

மேலும், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, நகர்ப்புற வார்டுகள், வட்டாரங்கள் மற்றும் கிராம அளவில் குழந்தைகள் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கூட்டங்களைநடத்திகுழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை ஆய்வு செய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

அந்தக் கூட்டங்களின் நடவடிக்கைகள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு தொடர்பான அறிக்கைகளை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தின் நிறைவில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வம் தீர்மானங்களை வாசித்தார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் முன்னிலையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வம், மாவட்ட சமூகநல அலுவலர் கோமதி, திருவண்ணாமலை ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் அன்பரசி, திருவண்ணாமலை குழந்தைகள் நலக்குழுத் தலைவர் முருகன், சிறுவர் நீதிக்குழும உறுப்பினர் லட்சுமி மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 21 அதிமுக எம்எல்ஏக்கள் மீதான தகுதி நீக்க நடவடிக்கையை கைவிட்டதில் என்ன தவறு? உயர் நீதிமன்றம் கேள்வி

அதிமுக கொறடா உத்தரவை மீறியதற்காக கட்சித் தலைமையிடம் மன்னிப்பு கோரியபிறகு 21 அதிமுக எம்எல்ஏக்கள் மீதான தகுதி நீக்க நடவடிக்கையை பேரவைத் தலைவர் கைவிட்டதில் என்ன தவறு உள்ளது என கேள்வி எழுப்பிய உயர்நீதிமன்றம் இது தொடர்பான வழக்கை தள்ளுபடி செய்தது.

தமிழக சட்டப்பேரவையில் கடந்த மே 13 அன்று தவெக அரசுக்கு ஆதரவாக நம்பிக்கை தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அப்போது அதிமுகவைச் சேர்ந்த 25 எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

அதிமுக கொறடா உத்தரவை மீறி தவெக அரசுக்கு ஆதரவாக செயல்பட்டதால் அந்த 25 பேரையும் தகுதி நீக்கம் செய்யக்கோரி அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பேரவைத் தலைவரிடம் கடிதம் அளித்தார்.

இந்நிலையில் மதுராந்தகம் மரகதம் குமரவேல், பெருந்துறை ஜெயக்குமார், தாராபுரம் சத்தியபாமா, அம்பாசமுத்திரம் இசக்கி சுப்பையா ஆகியோர் தங்களது பதவியை ராஜினாமா செய்த நிலையில், எஞ்சிய 21 அதிமுக எம்எல்ஏக்களும் மன்னிப்பு கோரி கடிதம் அளித்துள்ளதால் அவர்களுக்கு எதிரான தகுதி நீக்க நடவடிக்கை கோரும் மனுவை திரும்பப்பெற்றுக்கொள்வதாக அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி பேரவைத் தலைவருக்கு மீண்டும் கடிதம் கொடுத்தார்.

அதையேற்று பேரவைத் தலைவர் 21 அதிமுக எம்எல்ஏக்களுக்கு எதிரான தகுதி நீக்க நடவடிக்கையை கைவிடுவதாக உத்தரவு பிறப்பித்தார்.


இந்நிலையில், பேரவைத் தலைவரின் இந்த கைவிடுதல் உத்தரவு சட்டவிரோதமானது என்றும், அதை ரத்து செய்யக்கோரியும் வழக்கறிஞர் பி.வி.செல்வக்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர் மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சக்திவேல், 'கட்சி மாறி வாக்களித்தவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் எந்த அரசியல் கட்சிக்கும் இல்லை. கொறடா உத்தரவை மீறி கட்சிக்கு எதிராக செயல்படும் எம்எல்ஏக்கள் தாமாகவே தங்களது பதவியை துறந்து விடுகின்றனர். இந்நிலையில் அவர்கள் மன்னிப்பு கோரிவிட்டார்கள்.

நாங்களும் அதை ஏற்றுக்கொள்கிறோம் என்கிற ரீதியில் கொறடா உத்தரவை மீறி செயல்பட்டவர்களுக்கு எதிரான தகுதி நீக்க நடவடிக்கையை கைவிட்டதைத்தான் அரசியல் சாசன கேலிக்கூத்து என்கிறோம்' என்றார்.

அப்போது பேரவைத் தலைவர் தரப்பில் ஆஜரான அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், 'இது ஒரு கட்சியின் எம்எல்ஏக்களுக்கும், அந்த கட்சிக்கும் இடையிலான பிரச்னை. கொறடா உத்தரவை மீறி செயல்பட்டவர்களை பொதுச்செயலாளர் மன்னித்து விட்டதால் அவர்கள் மீண்டும் அந்த கட்சியின் உறுப்பினர்களாகவே செயல்படுகின்றனர். இதுதொடர்பாக மூன்றாவது நபர் யாரும் பொதுநல வழக்கு தொடர முடியாது' என்றார்.



அதையடுத்து நீதிபதிகள், ``கொறடா உத்தரவை மீறி வாக்களித்தவர்களை அக்கட்சியின் தலைமை மன்னித்து விட்டதால், அவர்கள் அந்த கட்சியின் உறுப்பினர்களாகவே நீடிக்கின்றனர். அதிமுக எம்எல்ஏக்கள் 21 பேரும் தங்களது பதவியை ராஜினாமா செய்யவில்லை.

சட்டப்படி 15 நாட்களில் அவர்கள் மன்னிப்பு கோரியுள்ளதால் அவர்கள் மீதான தகுதி நீக்க நடவடிக்கை திரும்பப் பெறப்பட்டுள்ளது. அதை பேரவைத் தலைவரும் ஏற்றுக்கொண்டுள்ளார். அதில் என்ன தவறு உள்ளது?

இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட கட்சி எந்த வழக்கும் தொடரவில்லை. கட்சிக்கு சம்பந்தமில்லாத மூன்றாவது நபர் இந்த வழக்கைத்தொடர எந்த முகாந்திரமும் இல்லை'' என தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

### வால்மீகி கழக நிதி முறைகேடு:

# பி. நாகேந்திராவை அமைச்சரவையிலிருந்து நீக்கக் கோரி KGF பாஜக போராட்டம்

கோலார், ஆகஸ்ட் 19

வால்மீகி கழகத்தின் ரூ.187 கோடி நிதி முறைகேடு தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு முழுமையான, நியாயமான மற்றும் வெளிப்படையான விசாரணை நடத்த வேண்டும் என்றும், பி. நாகேந்திராவை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, கோலார் மாவட்ட பாஜக சார்பில் கோலார் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டனப் போராட்டம் நடைபெற்றது.

கோலார் டிசி அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், KGF பகுதியைச் சேர்ந்த பாஜக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

கோலார் மாவட்ட பாஜக துணைத் தலைவர் வி. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில், KGF பகுதியைச் சேர்ந்த கட்சி நிர்வாகிகள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், பல்வேறு மோர்ச்சா தலைவர்கள், முன்னாள் நகராட்சி உறுப்பினர்கள், கட்சி தொண்டர்கள் மற்றும் ஆதரவாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பொதுமக்களின் பணம் மற்றும் அரசு நிதி தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து உண்மை நிலை மக்களுக்கு வெளிப்படையாக தெரிய வேண்டும் என்றும், இதுகுறித்து எந்தவித அரசியல் தலையீடும் இல்லாமல் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் போராட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

வெளிப்படையான விசாரணை வேண்டும்

வால்மீகி கழக நிதி தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளின் உண்மை நிலவரத்தை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்றும், விசாரணை நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடைபெற வேண்டும் என்றும் பாஜக நிர்வாகிகள் கோரிக்கை விடுத்தனர். பொதுப் பணம் தொடர்பான எந்தவொரு விவகாரத்திலும் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புக்கூறலும் அவசியம் என்றும், குற்றச்சாட்டுகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் உரிய விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

KGFல் இருந்து திரண்ட பாஜக நிர்வாகிகள்

இந்தப் போராட்டத்தில் விஜய்குமார் – OBC மோர்ச்சா, சங்கமித்ரா – மாவட்டச் செயலாளர், நைனா ரவி – முன்னாள் தலைவர், மேகநாதன், அனில், வேணி பாண்டியன், நாகராஜ், தீனா, சரவணன், சேனா உள்ளிட்ட முன்னாள் நகராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், சதீஷ் கௌடா – கிசான் மோர்ச்சா, பிரசாந்த், கிஷோர், சார்லஸ், விமலா நாகேந்திரன் உள்ளிட்ட பல்வேறு பாஜக நிர்வாகிகளும், KGFன் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கட்சி தொண்டர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

பங்காருபேட்டை பகுதியைச் சேர்ந்த மகேஷ், மேலும் ஓம் சக்தி செல்லப்பத்தி உள்ளிட்டோரும் போராட்டத்தில் கலந்து கொண்டு தங்களது ஆதரவை தெரிவித்தனர்.

KGFன் பல்வேறு பகுதிகளில் இருந்து பாஜக நிர்வாகிகளும் தொண்டர்களும் கோலார் டிசி அலுவலகம் முன்பு ஒரே அணியாக திரண்டது, இந்த விவகாரத்தில் கட்சியின் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது.



"பொதுப் பணத்தில் சமரசம் இல்லை"

போராட்டத்தில் பங்கேற்ற பாஜக நிர்வாகிகள், பொதுப் பணம் தொடர்பாக எந்தவொரு குற்றச்சாட்டு எழுந்தாலும் அதன் உண்மை நிலை மக்களுக்கு தெரிய வேண்டும் என்றும், விசாரணை நியாயமாகவும் வெளிப்படையாகவும் நடைபெற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

அரசியல் செல்வாக்கு காரணமாக உண்மை மறைக்கப்படக் கூடாது என்றும், பொதுமக்களின் நம்பிக்கையை நிலைநிறுத்தும் வகையில் அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மக்களின்பிரச்சினைகளில் தொடர்ந்து குரல் கொடுப்போம்

மக்களின் நலன் சார்ந்த எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் அதை அரசாங்கத்தின் கவனத்திற்கு தொடர்ந்து கொண்டு செல்வோம் என்றும், பொதுமக்களின் உரிமைகள் மற்றும் பொதுநிதியின் பாதுகாப்புக்காக தொடர்ந்து குரல் கொடுப்போம் என்றும் KGF பாஜக நிர்வாகிகள் தெரிவித்தனர்.

வால்மீகி கழக நிதி தொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் மீது முழுமையான விசாரணை நடத்தப்பட்டு, உண்மை நிலை மக்களுக்கு தெரியப்படுத்தப்பட வேண்டும் என்பதே தங்களது முக்கிய கோரிக்கை என்றும் அவர்கள் கூறினர்.

பாஜக பொதுச் செயலாளர் பாண்டியன் வலியுறுத்தல்

KGF பாஜக பொதுச் செயலாளர் பாண்டியன், மக்களின் பிரச்சினைகளில் கட்சி தொடர்ந்து குரல் கொடுக்கும் என்றும், பொதுமக்களின் நலனுக்காக தொடர்ந்து செயல்படுவோம் என்றும் தெரிவித்தார்.

பொதுநிதி தொடர்பான விவகாரங்களில் பொறுப்புக்கூறலும் வெளிப்படைத்தன்மையும் உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். கோலார் டிசி அலுவலகம் முன்பு முழக்கங்கள் போராட்டத்தின் போது, "பொறுப்புக்கூறலில் சமரசமில்லை... வெளிப்படைத்தன்மையில் சமரசமில்லை... பொதுப் பணம் என்று வரும்போது சமரசமில்லை" உள்ளிட்ட முழக்கங்களை பாஜக நிர்வாகிகளும் தொண்டர்களும் எழுப்பினர்.

வால்மீகி கழக நிதி தொடர்பான விவகாரத்தில் உண்மை வெளிக்கொணரப்பட வேண்டும், பொதுமக்களின் பணத்திற்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும், குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதே போராட்டத்தின் முக்கிய கோரிக்கையாக இருந்தது.

கோலார் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற இந்தப் போராட்டம், வால்மீகி கழக நிதி விவகாரத்தை மீண்டும் அரசியல் மற்றும் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

அரசுஇந்தவிவகாரத்தில் எவ்வாறு பதிலளிக்கிறது, விசாரணை எந்த திசையில் செல்கிறது, அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன என்பதுதான்தற்போது அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது. இறுதியாக, "தேசம் முதலில்... கட்சி முதலில்... மக்களே முதன்மை!" என்ற முழக்கத்துடன் கோலார் டிசி அலுவலகம் முன்பு நடைபெற்ற பாஜக போராட்டம் நிறைவடைந்தது.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA